www.padippakam.com



# போர்த்துக்கேயரிடம் யாழ்ப்பாணம் வீழ்ந்த கதை

25

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை...

தொடர்கின்ற வரலாற்று மோசடிகளும் துரோகங்களும்

### வரலாற்றுத் தொடர்

சங்கிலி செகராசசேகரனது ஆட்சிக்காலத்தில் வனுக்கும்- அவன் அண்ணன் பரநிருபசிங்கனுக்கும் இடையில் நிகழ்ந்த ஆட்சித்தகராறு தொடர்பான குழப்பங்களை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு - திருகோணமலையிலிருந்த வன்னியர்கள் கண்டியரசனின் துணையோடு தங்களது அரசை தனியரசாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்கள். போர்த்துக்கேயரின் ஆதரவும் அவர்களுக்கிருந்ததால் சங்கிலியனால் அவர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை.


கி.பி. 1551-ம் ஆண்டளவில் திருகோணமலையில் ஆட்சி செய்த வன்னியன் இறக்க, பட்டத்து இளவரசனாக இருந்த அவன் மகன் 8 வயதுச் சிறுவனாக இருந்தபடியால் அவனது நெருங்கிய உறவு முறையான பிறொரு வன்னியன் அவனுக்காக ஆட்சிக்கு வந்தான். இந்தச் சந்தர்ப்பத்தில் தனது பழைய பாரம்பரிய உரிமையை நிலைநாட்ட சங்கிலி திருகோணமலைக்கு படையெடுத்துச் செல்ல - அவ் வன்னியன் - இளவரசனான சிறுவனையும் அழைத்துக் கொண்டு - போர்த்துக்கேயரிடம் உதவிகோரி கோடிக் கரைக்குச் சென்றான்.

சங்கிலியை ஒழிப்பதற்கு தருணம் பார்த்துக் கொண்டிருந்த போர்த்துக்கேயர்கள் தங்களிடம் உதவிகோரிய திருமலை வன்னியனுக்கு துணையாக படை ஒன்றை அனுப்பி வைத்தார்கள். ஆனால் கோடிக்கரையிலிருந்து வந்த போர்த்துக்கேயக் கூலிப்படை சங்கிலியனால் அழித்து நாசம் செய்யப்பட, வன்னிய இளவரசனான சிறுவன் போர்த்துக்கேயரோடு ஓடிவிட, அவனது பிரதானியாக இருந்த வன்னியன் சங்கிலியனிடம் சரணடைந்து தன்னுடைய தவறுகளுக்கு மன்னிப்புக்கோரினான். அவனை மன்னித்து ஏற்றுக்கொண்ட சங்கிலியன் அவனையே திருமலை அரசனாக முடிசூட்டி தனக்கு கீழ்ப்படிந்து நடக்கும்படி கட்டளையிட்டான்.

திருமலையிலிருந்து போர்த்துக்கேயர் தாங்கள் அழைத்துச் சென்ற வன்னிய இளவரசன்னை கோவாவுக்கு அனுப்பி கிருஸ்த்தவ மதத்தில் சேர்த்து 'அல்பொன் சோ' என்னும் பெயர் சூட்டி யாழ்ப்பாணத்தை தாங்கள் வெல்லும்போது அவனையே அரசானாக்குவதாகச் சொல்லி வளர்த்து வந்தார்கள்.

கி.பி. 1552-ல் கோட்டை அரசன் புவனேகபாகுவை போர்த்துக்கேயன் ஒருவன் சுட்டுக் கொன்றுவிட அவனது பேரனாகிய பண்டாரவின் மகன் தர்மபாலனை போர்த்துக்கேயர்கள் கோட்டை அரசனாக்கினார்கள். தன்மகனை பொம்மையாக வைத்து அவர்களே ஆட்சி நடத்துவதை விரும்பாத பண்டார - கலகம் செய்ய அவர்கள் அவனை தந்திரமாகப் பிடித்து சிறையில் அடைத்து விட்டனர். சிறையில் இருந்த பண்டார தனது மனைவியின் உதவியுடன் சில சிங்கள போர் வீரர்களை தன் பக்கம் சாரச் செய்து, சிறையிலிருந்து சுரங்கம் அமைத்து அதன் வழியாக தப்பித்துச்சென்று கொஞ்சம் சிங்களப்படை வீரர்களைத் திரட்டி, கொழும்பிலும் அதன் புறநகர் பகுதிகளிலுமிருந்த பல கிறிஸ்த்தவ தேவாலயங்களை இடித்தும் எரித்தும் சேதப்படுத்தி வந்தான். அவன் சீதாவாக்கை அரசன் மாயாதுன்னையுடன் கூட்டு வைத்துக் கொண்டு - அவன் விதவை மகளையும் - மணந்தான். பின்பு மாயாதுன்னை போர்த்துக்கேயர் பக்கம்சார்ந்து விட அவனிடமும் சண்டை போட்டுக் கொண்டு - தன். குடும்பத்தினரையும் வேண்டியளவு பொருளையும் - புத்த தந்தத்தையும் எடுத்துக் கொண்டு கி.பி.1555-ல் யாழ்ப்பாணம் வந்து சங்கிலியனைச் சந்திப்பதற்காக தாராக் குளத்தடியில் கூடாரமடித்துத் தங்கியிருந்தான்.

போர்த்துக்கேயரின் எதிரி என்ற அடிப்படையில் அவனு-க்கு ஆதரவளித்த சங்கிலியன் அவனும் அவனது பரிவாரங்களும் தங்கியிருப்பதற்கு வேண்டிய வசதிகளும் செய்துகொடுத்தான். ஆனாலும் போர்த்துக்கேயரை எதிர்ப்பதற்காக இருதரப்பாரும் - வீரகாளி அம்மன் முன்னால் சத்தியம் செய்து ஒப்பந்தம் ஒன்றை செய்வதற்காக பண்டாரவும் அவனது பரிவாரங்களும் சங்கிலியும் அவன் பரிவாரங்களும் வீரகாளி அம்மன் கோவில் முன்றலில் கூடியிருந்தபோது-திடீரென்று- அங்கிருந்த வெடிமருந்தில் தீப்பிடித்துக் கொள்ள தன்னைக் கொல்வதற்கு சங்கிலியன் செய்த சதி என்று எண்ணிய பண்டார தன்னுடைய வாளை உருவிக் கொண்டு சங்கிலியனைக் கொல்லப் பாய சங்கிலியன் முந்திக் கொண்டு அவன் தலையை வெட்டிக் கொன்று விட்டான்.



யாழ்ப்பாணத்தில் நிலைமை இவ்வாறிருக்க இந்தியாவில் விஜயநகரப் பேரரசு பலம் பொருந்திய அரசாக மாறி தனது எல்லைகளை விஸ்தரிக்க விஸ்தரிக்க - தமிழ்நாட்டிலும் கேரளாவிலுமிருந்த போர்த்துக்கேயரின் தளங்களுக்கு ஆபத்தேற்பட்டது. தவிர்க்க முடியாத அவர்கள் புதிய தளப் பிரதேசத்தை தேட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குள்ளானார்கள்.

இந்தியாவை விட யாழ்ப் பாணமே தங்களுக்கு பாதுகாப்பான தளம் எனக் கருதிய போர்த்துக்கேய தேசாதிபதி கொன்ஸ் தாந்தீனு து பிறகன்சா யாழ்ப்பாணத்தை கைப்பற்றுதற்கு வேண்டிய ஆயுதங்களை செய்ய ஆரம்பித்தான்.

கி.பி 1560-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் திகதி அவனது தலைமையிலே 70 கப்பல்களிலும் நூற்றுக்கணக்கான சிறு படகுகளிலும் கோவாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி போர்த்துக்கேயப்படை புறப்பட்டது. யாழ்ப்பாணத்துக்கு முடிசூடவென அவர்களால் வளர்க்கப்பட்ட வன்னிய இளவரசனான அல்போன்சோவும் அந்தப்படையுடன் கூட்டி வரப்பட்டான் கொச்சின் கரை வந்தபோது மேலும் 7 போர்க் கப்பல்கள் அவர்களது படையுடன் சேர்ந்து கொண்டன.

1560-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 20-ம் திகதி போர்த்துக்கேயப்படை கரையூருக்கு அண்மையில் வந்து நங்கூரமிட்டது. இரண்டு நாட்களாக அவர்கள் எங்கு இறங்கலாம் என ஆலோசனை நடத்தினார்கள்.

சங்கிலியும் இந்தப்படை கொழும்புத்துறையில் இறங்கக் கூடும் என்று எண்ணி அங்கே 500 கால் துவக்குகளையும் 40 பீரங்கிகளையும் 20 நிலப் பொறி குழிகளையும் அமைப்பித்தான். ஆனால் அவன் எண்ணியபடி நடக்காது, ஒக்டோபர் மாதம் 21ம் திகதி மாலை போர்த்துக்கேயப் படை பட்டணத்துறையில் தரையிறங்கியது. சங்கிலியன் முத்துகுமாரனின் தலைமையில் 2000 போர் வீரர்கள் அடங்கிய தமிழ்ப்படை அவர்களை எதிர்த்தது. ஆனால் போர்த்துக்கேயரின் துப்பாக்கிகளும் பீரங்கிகளும் பொழிந்த குண்டுமழைக்கு முகங்கொடுக்க முடியாமல் தமிழர் படை சிதறி ஓடிப் பின்வாங்கியது. 1200 பேரைக் கொண்ட போர்த்துக்கேயப் படை அணிவகுத்து நல்லூரை நோக்கிச் சென்றது. சங்கிலியனது மகனின் படை மீண்டும் ஒருமுறை அந்தப்படையை எதிர்த்துத் தோல்வி கண்டது.

போர்த்துக்கேயப் படை நல்லூர் வாயிலை அடைந்தது - அங்கிருந்த தமிழர் படை அணியணியாக நின்று அதை எதிர்த்தது. இரண்டு தரப்பிலிருந்தும் உக்கிரமான யுத்தம் நடந்தது. பீரங்கிகள் குண்டு மாரி பொழிந்தன. துப்பாக்கிகள் நெருப்பைக் கக்கிக் கொண்டு சன்னங்களை உமிழ்ந்தன. ஆனாலும் நன்கு அணி வகுக்கப்பட்ட ஒழுங்கமைக்கப்பட்ட போர்த்துக்கேயப்படை முன்னால் சங்கிலியனின் தமிழ்ப்படை தோற்றுப் போய்விட்டது. தமிழர் படை பின்வாங்க போர்த்துக்கேயப் படை நல்லூர் கோட்டை மதில் சுவரை உடைத்துக் கொண்டு நல்லூர் நகரத்துக்குள் பிரவேசித்தது. அடுத்தகணம் அங்கே ஓலைகளால் மூடி மறைத்து வைக்கப்பட்டிருந்த பீரங்கிகள் குண்டுமாரி பொழிய சில போர்த்துகேயர்கள் வீழ்ந்து மடிந்தனர். அதே சமயம் வீடுகளின் மாடியிலிருந்தும் - மரங்களின் மேல் இருந்தும் தமிழர்கள் படை அம்புகள் எய்தும் ஈட்டிகள் எறிந்தும் போர்த்துக்கேயப்படைகளைத் தாக்கினர். போர்த்துக்கேயத் தளபதி பிரகன்சா சென்ற குதிரை சங்கிளயனின் படைத்தளபதியால் வெட்டி வீழ்த்தப்பட அவன் மயிரிழையில் உயிர் தப்பிவிட்டான்.

**வீடுகளின் மாடியிலிருந்தும் — மரங்களின் மேல் இருந்தும் தமிழர்கள் படை அம்புகள் எய்தும் ஈட்டிகள் எறிந்தும் போர்த்துக்கேயப் படைகளைத் தாக்கினர்**

**'அல்பொன் சோ' என்னும் பெயர் சூட்டி யாழ்ப்பாணத்தை தாங்கள் வெல்லும்போது அவனையே அரசானாக்குவதாகச் சொல்லி வளர்த்து வந்தார்கள்**

- நக்கீரன்

படிப்பகம்